

காஞ்சிபுரம் பேரறிஞர் அண்ணா மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், மாநகராட்சி மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ், மாவட்ட ஊராட்சி குழுத் துணைத் தலைவர் சுகுமார் ஆகியோர் உள்ளனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி மாநகர வடக்கு பகுதி அண்ணா நகர் மெயின் ரோட்டில் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை முகாம் பகுதி கழக செயலாளர் ஜி.நாராயண பிரசாத் ஏற்பாட்டில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார் முன்னிலையில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ, "இல்லம்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சியை துவக்கி வைத்து வீடு வீடாக சென்று இளைஞர்களை சந்தித்து, கழக வரலாறு, கொள்கைகள் மற்றும் கழக ஆட்சியின் சாதனைகளை எடுத்துக் கூறி புதிய உறுப்பினர்களை இணைத்தார். மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மேயர் ஜி.உதயகுமார், பகுதிச் செயலாளர் பொன்.விஜயன், மாநகர அமைப்பாளர் ஜி.துர்கா பிரசாத், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, அக்னி ராஜேஷ், டி.பிரியாகுமார், முஸ்தபா அஃப்ரிடி, வழக்கறிஞர் பெ. வினோத், மருத்துவர் ராஜேஷ், வீரபாண்டியன், ரவிகுமார், பன்னீர் செல்வம் உள்பட பலர் உள்ளனர்.

## திருவள்ளூர் மேற்கு மாவட்டம்

# ஒன்றிய, நகர, பேரூர் கழக மாணவரணி பொறுப்புகளுக்கான நேர்காணல்!

### மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



திருவள்ளூர், செப்.13-

திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக மாணவரணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கான நேர்காணல் நாளை (14.9.2024, சனிக்கிழமை) காலை 09.00 மணி அளவில் திருத்தணி நகரத்தில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இதில் மாநில மாணவரணி இணைச் செயலாளர் எஸ்.மோகன், மாணவரணி துணைச் செயலாளர் மன்னை த.சோழராஜன், மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு ஆகியோர் கலந்து கொண்டு நேர்காணலை நடத்துகிறார்கள்.

எனவே ஒன்றிய, நகர, பேரூர், அமைப்பாளர், துணை அமைப்பாளர் பொறுப்புக்காக விண்ணப்பித்தவர்கள் தவறாமல் வருகை தந்து பங்கேற்குமாறு திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டுள்ளார்.

### மு.சிவகுமார், பி.தமிழரசன், டி.சேகர் ஏற்பாட்டில் - வை.ம.அருள்தாசன் முன்னிலையில்

# திருவொற்றியூர் 1,2,3 (3அ)ஆகிய வட்டங்களில் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார்! கே.பி. சங்கர் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, செப். 13-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி 1,2,3, மற்றும்(3அ) ஆகிய வட்டங்களில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ., தலைமையில் மாநில மீனவர் அணி துணை தலைவரும் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினருமான கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் ஆகியோரின் முன்னிலையில் வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் அந்தந்த வட்டங்களில் நடைபெற்றது.

வட்டம் -1 - இடம் - காமராஜர் நகர் சமுதாய நலக்கூடம்வட்ட கழக செயலாளர் மு. சிவகுமார் எம்.சி, ஏற்பாட்டில்

வட்டம் -2 - இடம்- சி.எஸ்.ஐ. சமுதாய நலக்கூடம் எண்ணூர். வட்ட கழக பொறுப்பாளர் டி.சேகர் ஏற்பாட்டில்

வட்டம் -3 &(3அ) - இடம்- அன்னை சிவகாமி நகர் சமுதாய நலக்கூடம், வட்ட கழக செயலாளர்கள் பி.தமிழரசன் (எ) தம்பியா எம். சி, மு. மாணிக்கவேலன், ஆகியோரின் ஏற்பாட்டில் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ் சுதர்சனம் எம்.எல்.ஏ., தலைமையேற்று திராவிட மாடல் அரசின் சாதனைகள் குறித்தும் நடைபெறவிருக்கும் முப்பெரும் விழா குறித்தும், கழக ஆக்கப் பணிகள் குறித்தும், எதிர்காலங்களில் நடைபெறவிருக்கும் தேர்தல்கள் குறித்தும் ஆலோசனை வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட கழக அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன் பொருளாளர் எம்.ஆனந்தன், பகுதி கழக நிர்வாகிகள் ந.திருசங்கு, இ.குமரவேல், யு.எஸ்.குறளரசன், எம்.வஜ்ரவேல் மாவட்ட பிரதிநிதிகள் ந.ராம்குமார், எம்.சந்திரகுமார், ஜி. தினேஷ், ஆர்.மோகனசுந்தரம், ஆர்.தினேஷ்குமார், எஸ். ஆர்.மலைராஜ், பொன்.கோ.விஜயன், வீ.வீரமுத்து, சார்பு அணிகளின் மாவட்ட தலைவர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், சார்பு அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட நிர்வாகிகள், பாக முகவர்கள், மகளிர் அணி நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் திரளாக பங்கேற்று சிறப்பித்தனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி 30வது வட்டத்தின் சார்பாக வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் வட்டச் செயலாளர் திருமலை துரைசாமி எம்.சி. ஏற்பாட்டில் நடைபெற்றது. இந்த வட்ட கழக பொது உறுப்பினர் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் எஸ். சுதர்சனம் எம்.எல். ஏ. கலந்து கொண்டு கழக ஆக்கப் பணியும் பல நல்ல கருத்துக்களும் வழங்கி சிறப்பித்தார். இதில் மாவட்ட துணைச் செயலாளர் ராமகிருஷ்ணன் பகுதி செயலாளர் ஜி.துக்காராம் அவை தலைவர் ஏழுமலை எம்.சி. மற்றும் 30வது ஆவட்டக் கழக செயலாளர் டி.சுந்தரம் மற்றும் முப்பது வட்டக் கழக நிர்வாகிகளும் பகுதியில் இளைஞர் அணி அமைப்பாளரும் மற்றும் மருத்துவர் அணி மற்றும் மகளிர் அணி பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.மற்றும் ஜி.பார்த்தசாரதி, இ.மோகன், டி.குருமூர்த்தி, ஆர்.கண்ணன், பி.டி. மூர்த்தி, கஜேந்திரன், சுசிலா தியாகராஜன், பாண்டியன், சுந்தரபாபு, ஜெயசீலன், தனசேகர், திருமதி பட்டு, துரைசாமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



எழும்பூர் வடக்கு பகுதி, 78 அ வட்டக் கழக பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம், வட்ட அவைத் தலைவர் என்.மனோகரன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர், சென்னை மாநகராட்சி நியமன குழு உறுப்பினர் சொ. வேலு,கழக சட்டத்துறை இணை செயலாளர் கே.எஸ்.இரவிச்சந்திரன் ஆகியோர் ஆலோசனை வழங்கினர். கூட்டத்திற்கான ஏற்பாட்டினை 78 அ வட்டக் கழக செயலாளர் ந.பாலு செய்திருந்தார். இதில் எம்.தில்லை குமார், சூளை சுப்புராயலு, மு. முரளிதரன் எஸ் நாராயணன்,எம். ராஜேந்திரன்,வி. ஜான்சி,எஸ். ராஜேந்திரன், சி.குணசேகரன்,எஸ். தமிழ்ச்செல்வன்,எம். பாலாஜி,லோகேஷ், யோகேஷ் பாலாஜி, மோகன்குமார், பி.விஜயகுமார், மதிவாணன், என்.பி.செல்வம், வெங்கடேசன், மேகலா, வி.விஜயகுமார் உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

## விருதுநகர் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் தாயார்

# திருமதி ஆர்.ஆண்டாளம்மாள் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப்.13-

விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் அவர்களது தாயார் திருமதி ஆர்.ஆண்டாளம்மாள் அவர்கள் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் அவர்களது அருமைத் தாயார் திருமதி ஆர்.ஆண்டாளம்மாள் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து வருத்தமடைந்தேன்.

அன்னையை இழந்து வாடும் சீனிவாசன் மற்றும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## கடலூர் கிழக்கு மாவட்டத்தில்

# ஒன்றிய - நகர - பகுதி பேரூர்க்கு மாணவரணி நிர்வாகிகளுக்கான விண்ணப்பங்கள்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கை!



கடலூர், செப் 13-

கடலூர் கிழக்கு மாவட்ட திமுக மாணவர் அணிக்கு ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் ஆகிய பகுதிகளுக்கு அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்களை நியமிப்பதற்காக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என்று

மாவட்ட திமுக செயலாளர் அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு

முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, கழக மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ., அறிவிப்பின்படி, கடலூர் கிழக்கு மாவட்ட திமுக மாணவர் அணிக்கு ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் ஆகிய அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்களை நியமிப்பதற்காக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். இதில் ஒரு அமைப்பாளர், ஐந்து துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படுவர். துணை அமைப்பாளர்களில் ஒருவர் ஆதிதிராவிடர் / பழங்குடியினத்தைச் சேர்ந்தவராகவும் மற்றும் பெண் துணை அமைப்பாளர் ஒருவரும் இருப்பது அவசியம். ஒரு துணை அமைப்பாளர் தற்போது கல்லூரியில் பயிலக்கூடிய மாணவராக இருத்தல் அவசியம். நியமிக்கப்படவுள்ள நிர்வாகிகள் அனைவரும் கல்லூரி / டிப்ளமோ படிப்பை முடித்தவராகவோ அல்லது தற்போது கல்லூரியில் பயிலக்கூடியவராகவோ இருத்தல் வேண்டும். இப்பொறுப்புகளுக்கு விண்ணப்பிப்போர் கடலூர் கிழக்கு மாவட்ட அலுவலகத்திலோ அல்லது முரசொலியில் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தை நகல் எடுத்தோ அல்லது வலைதள முகவரியிலிருந்தோ பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம். அதனை பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் ,மாவட்ட கழகத்தில் ஒப்படைக்க வேண்டும். அமைப்பாளர் துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் அந்தந்த மாவட்டத்திலேயே மாணவர் அணி நிர்வாகிகளால் நடத்தப்படும். நேர்காணல் நடைபெறும் நாள், நேரம், இடம் பின்னர் தெரிவிக்கப்படும்.

குறிப்பு: ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் பொறுப்புகளுக்கு விண்ணப்பிப்போர் 30 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். கல்விச் சான்றிதழ், வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, நகல் இணைக்கப்பட வேண்டும். பாஸ்போர்ட் அளவு வண்ண புகைப்படம் விண்ணப்பத்தில் ஒட்ட வேண்டும். இப்பொறுப்புகளில் உள்ள தற்போதைய நிர்வாகிகள் மீண்டும் அப்பொறுப்புகளுக்கு வர விரும்பினால் அவர்களும் விண்ணப்பிக்க வேண்டியது அவசியம். விண்ணப்பத்தில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் தெளிவாக, முழுமையாக நிரப்ப வேண்டும்.

விண்ணப்பப் படிவம் பதிவிறக்கம் செய்ய: http://surl.li/mwoy

மேலும் தொடர்புக்கு: முகநூல் http://www.facebook.com/EzhilarasanCVMP,

டுவிட்டர் https://twitter.com/EzhilarasanCVMP

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

## வடகிழக்குப் பருவ மழை! கோடம்பாக்கம் மண்டலத்தில்

# புதிய மழைநீர் வடிகால் பணிகள்!

### மேயர் ஆர்.பிரியா ஆய்வு!

சென்னை, செப். 13-

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் புதிய மழைநீர் வடிகால்கள் அமைத்தல், மழைநீர் வடிகால்கள், வண்டல் வடிகட்டித் தொட்டிகள் மற்றும் கால்வாய்கள் ஆகியவற்றில் வண்டல்கள் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, நேற்று (12.09.2024) மேயர் திருமதி ஆர்.பிரியா, கோடம்பாக்கம் மண்டலத்திற்குட்பட்ட வார்டு-127, 128, 129, 136 மற்றும் 138க்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் மழைநீர் வடிகால் பணிகள், தூர்வாரும் பணிகள், தீவிரத் தூய்மைப் பணிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-127க்குட்பட்ட சின்மயா நகர் கால்வாயினைப் பார்வையிட்டு, கால்வாயில் காணப்படும் வண்டல்கள் மற்றும் கழிவுகளை அகற்றும் வகையில் உடனடியாக தூர்வாரும் பணியினை மேற்கொண்டு, பருவமழைக்கு முன்னதாக முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, வார்டு-128க்குட்பட்ட விருகம்பாக்கம் மயானபூமியினைப் பார்வையிட்டு, மயானபூமியில் தீவிரத் தூய்மைப் பணி மேற்கொண்டு சுத்தமாக பராமரித்திடவும், நவீனமயமாக்கி பசுமைப் பரப்பை அதிகரிக்கும் வகையில் மதிப்பீடு தயார் செய்து பணிகளை தொடங்கிடவும், இங்குள்ள மழைநீர் வடிகால்களை தூர்வாரிடவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், இங்கு புதிதாக அமைக்கப்பட வேண்டிய மழைநீர் வடிகால் பணிகள் குறித்து விவாதித்து அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

பின்னர், வார்டு-129க்குட்பட்ட போஸ்டல் ஆடிட் காலனி, பஞ்சாயத்து காலனி பகுதியில் விருகம்பாக்கம் கால்வாயில் இணைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால்களுக்கு பதிலாக புதிய மழைநீர் வடிகால் அமைப்பதற்கு மதிப்பீடு தயார் செய்து பணியினை உடனடியாக மேற்கொண்டு முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், வார்டு-136க்குட்பட்ட 80 அடி சாலை, ஆற்காடு சாலையில் உள்ள மழைநீர் வடிகால்களில் ஏற்பட்டுள்ள அடைப்புகளை சரிசெய்யும் வகையில் தூர்வாரும் பணிகளை மேற்கொள்ள தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். தொடர்ந்து, 18வது தெரு, 4வது செக்டார் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் மழைநீர் வடிகால் இணைப்புப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணியினை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ச்சியாக, வார்டு-138க்குட்பட்ட பச்சையப்பன் தெரு, அன்னை சத்யா நகர் மயானபூமியினைப் பார்வையிட்டு, எரிவாயு தகனமேடையின் செயல்பாடு குறித்து ஆய்வு மேற்கொண்டு, மயானபூமியினை சுத்தமாக பராமரித்திட அறிவுறுத்தினார். பின்னர், எம்.ஜி.ஆர். நகர் கால்வாயில் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பக்கச்சுவர் அமைக்கும் பணியினைப் பார்வையிட்டார். மேலும், பாரதிதாசன் சாலையில் ரூ.6 கோடி மதிப்பில் 1250 மீ. நீளத்திற்கு புதிய மழைநீர் வடிகால் அமைப்பது குறித்துப் பார்வையிட்டு, சென்னைப் பெருநகர் குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் சாலை வெட்டு மேற்கொள்ளப்பட்ட சாலைக்கு தடையின்மைச் சான்றினை பெற்று சாலையினை விரைந்து சீரமைக்குமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின் போது, விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, மண்டலக்குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் பொ.லோகு, திருமதி ஆர். ஸ்டெல்லா ஜாஸ்மின் ரத்னா, மு. ரவிசங்கர், செல்வி து. நிலவரசி, கே. கண்ணன், மண்டல அலுவலர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் தெற்கு பகுதி, 45வது வட்ட தி.மு.க சார்பில் பொது உறுப்பினர் கூட்டம் 45வது வட்ட கழக செயலாளர் ஜி.மாரிமுத்து தலைமையிலும், பெரம்பூர் தெற்கு பகுதி செயலாளர் க.ஜெயராமன் முன்னிலையிலும் நடைப்பெற்றது. இக்கூட்டத்தில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் இரா.கருணாநிதி, இரா.நரேந்திரன், எஸ்.ஆர். கமலக்கண்ணன், வி. தயாளன், ஏ.தமிழ்ச்செல்வன், டி.கமலக்கண்ணன் பா.மதிவாணன், மு.சாகுல்அமீது வி.வேதா, வி.எஸ்.பிரபு, நா.வீரமுத்து, மு.ரவி, ஆர்.ராஜேந்திரன், ஆர்.கே.எஸ்.எம். தம்பையா, எம்.சாந்தி, மு.அன்பழகன், ஓம்.டீலர்.கே.சுரேஷ் குமார், ஏ.மரியாராஜா, மாணிக்கம், மீன்.சி.முனியாண்டி, பா.இளமாறன், சாஸ்திரி நகர் எஸ்.குமார், எஸ்.டி.சண்முகம், மு.க.முனிஸ்சிவா, ஆர்.முத்துராமன், எம்.கே.குணசேகரன், எஸ்.மோகன்ராஜ், ஜே.பாபு எம்.கௌதமி, கோ யுவராஜ், கே.ராஜசேகர், பி.கல்யாணசுந்தரம், என்.கோமதி மற்றும் பாக முகவர்கள் கழக மூத்த முன்னோடிகள் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.